கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc.,L.L.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**நிறைவேற்றுகை மனு எண்.8/2024**

**உள்**

**அசல் வழக்கு எண்.33/2004**

------

1.ராஜு

2.சாந்தா ----மனுதாரர்கள்/வாதிகள் /தீர்ப்பு பெற்றவர்

**/எதிர்/**

சோலையப்பன் ----எதிர்மனுதாரர் /பிரதிவாதி/ தீர்ப்பு கடனாளி

இம்மனுவானது கடந்த 29.10.2024 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு , கடந்த 25.08.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் /தீர்ப்பு பெற்றவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் /பிரதிவாதி/ தீர்ப்பு கடனாளி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்கிசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இரு தரப்பு வாதங்களை கேட்டும், மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்....

**<u>உத்தரவு</u>**

எதிர்மனுதாரர் /பிரதிவாதி/ தீர்ப்பு கடனாளி நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக தீர்மானித்து, எதிர்மனுதாரருக்கு சிறைதண்டனை விதித்தோ, அல்லது அபராதம் விதித்தோ அல்லது இரண்டையும் விதித்தோ தகுந்த பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்புவிக்க வேண்டி இம்மனுவானது கட்டளை 21 விதி 32 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள் தாக்கல் செய்த நிறைவேறுதல் மனுவின் சுருக்கம்:–</u>**

(1) மனுதாரர், எதிர்மனுதாரர் மீது தாவா சொத்தைப் பொறுத்து, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:00 +0530

பேரில் தாவா சொத்தை மனுதாரரும், அவரது மனைவியும் அளந்து வேலி போடுவதற்காக கடந்த 30.09.2021 ம் தேதி தாவா சொத்தை அளந்து கொண்டிருந்தபோது, எதிர்மனுதாரர் மனுதாரர்களை அளக்க விடாமல், தாவா சொத்திற்குள் நுழைந்தால் கையை வெட்டுவேன், காலை வெட்டுவேன் என்று கூறி மனுதாரர்களை கீழே தள்ளியுள்ளார். மனுதாரர்கள் நீதிமன்ற தீர்ப்பை எடுத்துக் கூறியும், நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல், தீர்ப்பை தூக்கி குப்பையில்போடு என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

(2) எனவே மனுதாரர்கள் E.P. No.15/2021 ல் எதிர்மனுதாரர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி, தான் எந்த அவமதிப்பும் செய்யவில்லை என்று கூறியதன்பேரில், நீதிமன்ற அமீனா மூலமாக தாவா சொத்தைச் சுற்றி வேலை அமைக்க உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவின் பேரில் நீதிமன்ற அமீனா தாவா சொத்தை மனுதாரர்கள், காவல்துறை மற்றும் எதிர்மனுதாரர் முன்னிலையில் தாவா சொத்தை சுற்றி வேலி அமைத்து மனுதாரர் வசம் ஒப்படைத்துள்ளார். ஆகையால், மேற்படி மனுவை மனுதாரர்கள் வலியுறுத்தவில்லை என்று நிறுத்திக்கொண்டார்கள். எதிர்மனுதாரர், அமீனா அமைத்த வேலியை அப்புறப்படுத்தி, கல்தூண்களையும் உடைத்துள்ளார். எதிர்மனுதாரரின் செய்கைக்கு எதிராக கடந்த 16.02.2024 ம் தேதி மனுதாரர்களுக்கு கல் தூண்களை போட்டுத்தராததால் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்கள். மேற்படி நோட்டீசுக்கு எதிர்மனுதாரர் எவ்வித பதிலும் அனுப்பாமல் இருக்கிறார். மீண்டும் 31.07.2024 ம் தேதி தாவா சொத்தில் பில்லர் போட மனுதாரர்கள் முயன்றபோது, எதிர்மனுதாரர் மனுதாரர்களை கம்பு எடுத்து அடிக்க வந்துள்ளார். எனவே எதிர்மனுதாரர் மீது நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பு செய்ததற்கு சிறை தண்டனையோ அல்லது அபராதமோ விதித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மறுப்புரையின் சுருக்கம்:–</u>

(1) மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், விசயபடிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் எந்தவகையில் நீதிமன்ற அவமதிப்பு செய்தார் என்று குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை. மேலும் எதிர்மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு எதுவும் செய்யாமல் சட்டப்படியும், ஆவணங்களின்படியும் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் இம்மனுவுடன் அமைத்த அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:09 +0530

பொய்யானது என்றும், மேற்படி சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார்கள். மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், எதிர்மனுதாரர் கட்டியுள்ள ஓட்டு தாழ்வாரத்தை அப்புறப்படுத்தக் கோரியும், செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு எண்.33/2004 தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்டும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(2) தாவா சொத்து எதிர்மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பிலிருந்தே கழிப்பறை கட்டியும், வேப்பமரம் அமைத்தும், ஓட்டுத் தாழ்வாரம் அமைத்தும் தற்போதுவரை அனுபவம் செய்து வருகிறார். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்தை பொருத்து, தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், அதனை எதிர்த்து மேல்முறையீடு நடவடிக்கை தாக்கல் செய்யாமல் எதிர்மனுதாரர் சட்டப்படி அனுபவம் செய்து வருவதை மனுதாரர்கள் இடையூறு செய்து வருகிறார்கள். மேற்படி மனுதாரர்களுக்கு இம்மனுவை தாக்கல் செய்வதற்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமும் ஏற்படவில்லை. எனவே இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று எதிருரை தாக்கல்.

**4. தீர்வு–**

(1) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்களின் நிறைவேறுதல் மனு எதிர்மனுதாரரின் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் இல்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(2) இம்மனுவானது எதிர்மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக தீர்மானித்து எதிர்மனுதாரருக்கு சிறைத்தண்டனை விதித்தோ அல்லது அபராதம் விதித்தோ அல்லது இரண்டையும் விதித்தோ தகுந்த பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரருக்கு தாவா சொத்தை பொறுத்து, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:17 +0530

என்று ஓ.எஸ். 33/2004 ல் தீர்ப்பாகி உள்ளது என்றும், தாவா சொத்தை மனுதாரர் தரப்பில் அனுபவம் செய்வதற்காக வேலி அமைக்க முயன்ற போது எதிர்மனுதாரர் அவர்களை தடுத்து, இடையூறு செய்து வந்ததாகவும், அதனை அடுத்து இ.பி.நம்பர். 15/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில், தாவா சொத்தை அமீனா முன்னிலையில் அளந்து கல்லூன்றி மனுதாரர் தனது அனுபவத்திற்கு எடுத்துக்கொண்டார் என்றும், பின்பு எதிர்மனுதாரர் வேலியை அப்புறப்படுத்தி கல்தூண்களையும் உடைத்து விட்டார் என்றும், மீண்டும் மனுதாரர் கடந்த 31.07.2024 ம் தேதி தாவா சொத்தை அனுபவிப்பதற்காக பில்லர் போட முயன்றபோது, அதனை எதிர்மனுதாரர் தடுத்து நிறுத்தினார் என்றும், எனவே மனுதாரர் நீதிமன்ற உத்தரவின் படி, தாவா சொத்தை அனுபவம் செய்வதற்கு இடையூறாக இருக்கும் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அவமதிப்பு செய்ததற்கு சிறைதண்டனையோ, அபராதமோ விதித்து தண்டனை தரவேண்டியது அவசியம் என்று வாதிடப்பட்டது.

(4) மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிர்மனுதாரர் எந்த வகையில் நீதிமன்ற அவமதிப்பு செய்தார் என்று குறிப்பிட்டு மனுதாரர்கள் கூறவில்லை என்றும், மேலும் எதிர்மனுதார் நீதிமன்ற அவமதிப்பு எதுவும் செய்யாமல் தாவா சொத்தில் ஏற்கனவே கழிப்பறை கட்டியும் வேப்பமரம் அமைத்தும் ஓட்டு தாழ்வாரம் அமைத்தும் தற்போது வரை அனுபவம் செய்து வருகின்றார் என்றும், மனுதாரர் கூறுவது போல எவ்வித நீதிமன்ற அவமதிப்பும் எதிர்மனுதாரர் செய்யவில்லை என்றும் வாதிட்டார்.

(5) மனு கோப்பை பரிசீலிக்கையில், மனுதாரர், எதிர்மனுதாரர் மீது ஓ.எஸ். 33/2004 என்ற வழக்கில், தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் 25.10.2019 ம் தேதி மனுதாரருக்கு சாதகமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும் தெரியவருகிறது. மேற்படி வழக்கின் மீது மனுதாரர் இ.பி.நம்பர் 15/2021 தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுவில் நீதிமன்ற அமீனா மனுதாரர்கள், காவல்துறை, மற்றும் எதிர்மனுதாரர் முன்னிலையில் வேலி அமைத்து

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:25 +0530

மனுதாரர்களுக்கு கொடுத்துள்ளார் என்றும், ஆகையால், மேற்படி மனு, மனுதாரர்களால் வலியுறுத்தப்படவில்லை என்று மேலொப்பம் செய்யப்பட்டதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதும் தெரியவருகிறது. இவ்வாறு குறிப்பிட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றம் இ.பி.நம்பர் 15/2021 மனு கோப்பையை பரிசீலித்தது. மேற்படி பரிசீலனையில், 14.08.2023ம் தேதி நீதிமன்ற அமீனாவால் மனுதாரருக்கு தாவா சொத்தில் கல்ஊன்றி வேலி அமைத்து கொடுக்கப்பட்ட விவரம் குறிப்பிட்டுள்ளது தெரியவருகிறது.

(6) மேலும் மனுதாரர்கள் தரப்பில், நீதிமன்ற அமீனா தாவா சொத்தில் கல் ஊன்றி அமைத்து தந்த வேலியை எதிர்மனுதாரர் அப்புறப்படுத்திவிட்டார் என்றும், கல்தூண்களை உடைத்து போட்டார் என்றும், மனுதாரர்களை தாவா சொத்தில் நுழைய விடாமல் அச்சுறுத்தி வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், மனுதாரர்களால் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில், எவ்வித சாட்சியங்களையோ, சான்றாவணங்களையோ, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. இருப்பினும், எதிர்மனுதாரர் தரப்பில், தாக்கல் செய்துள்ள எதிருரையில், எதிர்மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு எதுவும் செய்யவில்லை, சட்டப்படி ஆவணங்களின் படி தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். தாவா சொத்தை பொறுத்து, மனுதாரருக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைத்துள்ளதால், தாவா சொத்தில் அனுபவம் செய்ய மனுதாரருக்கு உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு இருக்கும்பட்சத்தில், எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அனுபவம் செய்து வருவதாக எதிருரையில் குறிப்பிட்டுள்ளதை பரிசீலிக்கையில், எதிர்மனுதாரர் மனுதாரரை தாவா சொத்தில் அனுபவம் செய்யவிடாமல் இடையூறு செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது. தாவா சொத்தில் மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரர் இடையூறு செய்யக்கூடாது என்று எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரை தாவா சொத்தில் அனுபவம் செய்யவிடாமல் எதிர்மனுதாரர் அனுபவம் செய்து வருவது நீதிமன்ற அவமதிப்பாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆக, எதிர்மனுதாரர் மனுதாரரை தாவா சொத்தில் அனுபவம் செய்யவிடாமல் இடையூறு செய்து வருவது, நீதிமன்ற அவமதிப்பு என்று

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:34 +0530

இந்நீதிமன்றம் முடிவு செய்த நிலையில் எதிர்மனுதாரரை கைது செய்ய உத்தரவிடப்படுகிறது. மூன்று நாட்களுக்குள் படி மெமோ செலுத்த உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 23.09.2025.

**முடிவாக,** எதிர்மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக முடிவு செய்த நிலையில், எதிர்மனுதாரரை கைது செய்ய உத்தரவிடப்படுகிறது. மூன்று நாட்களுக்குள் படி மெமோ செலுத்த உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 23.09.2025.

மேற்படி, உத்தரவு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ம் நாள் பகரப்பட்டது.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:42 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அருப்புக்கோட்டை**

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2025.09.20 17:53:53 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

---

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
நிறைவேற்றுகை மனு எண்.8/2024
உள்
அ.வ.எண்.33/2004
உத்தரவு
நாள் – 12.09.2025

---